செய்தி வெளியீடு

# DIMO நிறுவனத்தின் தூதுவராக சங்கக்கார

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரபல துடுப்பாட்டக்காரரும் திறமைமிக்க விக்கெட் காப்பாளருமான குமார் சங்கக்கார தற்போது இலங்கையிலுள்ள அதிமதிப்பு வாய்ந்த வியாபார நிறுவனங்களில் ஒன்றான டீசல் அன்ட் மோட்டோர் எஞ்ஜினியரிங் (DIMO) நிறுவனத்தின் வர்த்தக நல்லெண்ணத் தூதுவராக செயற்படுகிறார்.

மேர்சடெஸ்-பென்ஸ், டாட்டா, கிறிஸ்லர் மற்றும் ஜீப் வாகனங்களின் பொது விநியோகஸ்தர் என்ற வகையில் பிரபல்யம் பெற்றுள்ள DIMO நிறுவனம், வாகன விற்பனையுடன் நின்றுவிடாமல் வேறு பல துறைகளுக்கும் அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது. வைத்திய உபகரணங்கள், மின்விநியோகம், தொலைத்தொடர்பு, விவசாய இயந்திரங்கள், பொருள்களின் கையாளுகை, களஞ்சியப்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் அது தற்சமயம் ஈடுபட்டுள்ளது.

எப்போதும் மிகவுயர்ந்த தராதரங்களையே கடைப்பிடிக்கும் DIMO நிறுவனம், எந்த துறையில் பிரவேசித்தாலும் ஒவ்வொரு அம்சத்திலும் நுட்பமாக கவனத்தைச் செலுத்துகின்றது. இந்த நற்பெயரின் காரணமாகவே மேர்சடெஸ்-பென்ஸ், சீமன்ஸ், பொஷ், டாட்டா, கிறிஸ்லர், MTU, கொமற்சு, மிச்சலின், ஒஸ்ராம், மஹிந்ரா, MTU, ஸெயிஸ், ஷெபர் போன்ற உலகப் புகழ்பெற்ற முதற் தரமான வர்த்தகப் பெயர்களில் வழங்கப்படும் பொருள்கள் DIMO நிறுவனத்துடன் தமது உறவுகளைத் தொடர்ந்து பேணிவருகின்றன.

குமார் சங்கக்கார கிரிக்கெட் நுட்பங்களில் ஆழ்ந்த அக்கறை காட்டுவதாலும் அபார ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு இடைவிடாது முயற்சி செய்வதாலும், இன்று உலகத் துடுப்பாட்ட வீரர்களின் தரப்படுத்தலில் முன்னணி வகிக்கிறார். அவர் ஓர் இணையற்ற துடுப்பாட்ட வீரர், உயர்ந்த பண்பாளர். சிறந்த குணாதிசயங்களும் தனித்துவமான கருத்துக்களும் கொண்டவர். அவர் தனது ஆட்டத் திறமையை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு சிறிய அம்சத்திலும் கவனம் செலுத்தி நீண்ட நேரம் பயிற்சி செய்பவர். “குமார் கிரிக்கெட் விளையாட்டை எவ்வாறு அணுகுகின்றாரோ, அவ்வாறே DIMO நிறுவனம் தனது வியாபாரத்தை அணுகுகின்றது” என்று டிமோவின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. ரஞ்ஜித் பண்டிதகே தெரிவித்தார். “இரு தரப்பினருமே தாம் செய்யும் காரியங்களில் தரச்சிறப்பின் சிகரத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றனர். தேவையேற்படும் வேளையில் 100% திறமையை வெளிப்படுத்துகின்றனர். ஒவ்வொரு தடவையும் சிறப்பாகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர். கடின உழைப்பு மற்றும் பயிற்சியின் அவசியத்தையும் அவர்கள் அறிந்துள்ளனர்” என்று திரு. பண்டிதகே குறிப்பிட்டார். DIMO நிறுவனத்தின் உலகத் தரமான பங்காளித்துவ உறவுகள் குறித்து தாம் பெருமை அடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரு தசாப்தங்களில், DIMO நிறுவனத்தின் மொத்த வியாபாரம் ரூ.100 மில்லியனிலிருந்து ரூ.13 பில்லியனாக அதிகரித்துள்ளது. அவ்வாறே, கடந்த எட்டு வருடங்களில் குமார் சங்கக்காரவின் சராசரி ஓட்ட எண்ணிக்கை 30களிலிருந்து 40களுக்கும் அதிலிருந்து 50களுக்கும் அதற்கு மேலும் அதிகரித்துள்ளது. ஏனெனில், இரு தரப்பினரும் ஒரு பொதுவான விடயத்தை நன்கு அறிந்துள்ளார்கள். தரச்சிறப்பில் காட்டும் அக்கறை எப்போதும் சிறந்த பலாபலன்களைத் தரும் என்பதே அந்த விடயமாகும்.

----------------------------